World Toilet Day
it's no Joke!

# இதுவும் வல்லரசு முயற்சிதான்!

நவம்பர் -19, உலக கழிப்பறை தினமாக விழிப்புணர்வை ஏற்படுத்தி அரசு செயலாற்றுகிறது. மக்களிடம் இதன் தாக்கம் பரவலாக்கவே இந்த ஆய்வுக் கட்டுரை.

மக்களின் உடல்நலத்தை மேம்படுத்த, 2014-ல் காந்தி பிறந்த அக்டோபர் 2-ம் தேதி, பிரதமர் நரேந்திர மோடி தூய்மை பாரத இயக்கத் திட்டத்தை அறிவித்தார். இந்த இயக்கத்தின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று, இந்தியாவைத் திறந்தவெளியில் மலம் கழிக்கமற்ற நாடாக ஆக்கவேண்டும் என்பதாகும்.

எனினும் உலகம் முழுவதிலும் உள்ள மக்களில் 95.4 கோடி மக்கள் திறந்தவெளியில் மலம் கழிக்கிறார்கள். இதில் 54.4 கோடி மக்கள் இந்தியர்கள். அதாவது இந்தியாவின் மக்கள்தொகையில் கிட்டத்தட்ட 50% பேர் திறந்தவெளியில் மலம் கழிக்கிறார்கள்.

ஏன் இப்படி? இதற்காக அரசு இதற்கு முன் எதுவும் செய்யவில்லையா?

முதன் முதலில் 1986-ல் மத்திய ஊரக சுகாதாரத் திட்டம் தொடங்கப்பட்டது. தனிநபர் இல்லக் கழிப்பறைகள் கட்டுவது, பெண்களுக்கான சுகாதார வளாகங்களைக் கட்டுவது, சுகாதாரச் சந்தைகளை அமைப்பது, திட திரவ கழிவுகளுக்கான மேலாண்மை போன்றவற்றில் கவனம் செலுத்தப்பட்டது.

1999-ல் தொடங்கப்பட்ட முழு சுகாதார இயக்கம், கழிப்பறையை மக்கள் தங்கள் தேவையாக உணரவைக்க, தகவல் தொடர்புக் கல்வியில் கவனம் செலுத்தியது. இதன் மூலம் கழிப்பறை என்பதை அரசு மக்களுக்குத் தருவதாக இல்லாமல், மக்கள் தங்களுக்கு வேண்டும் என்று உணர்ந்து, கோரிக்கையாக முன்வைக்க வேண்டும் என்பது, முதன்மை நோக்கமாகக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பறை கட்ட ரூ.500 மானியமாக வழங்கப்பட்டது. பிறகு இது ரூ.3200 ஆக உயர்த்தப்பட்டது.



மறுபடியும் 2012-ல் நிர்மல் பாரத் அபியான் பெயரால் திரும்ப சுகாதாரத்துக்கான ஒரு திட்டத்தை அரசு அறிவித்தது. குடிநீர் மற்றும் சுகாதாரத்துக்கான அமைச்சகம், முந்தைய திட்டத்தின் அம்சங்களோடு கூடுதலாக சிலவற்றைச் சேர்த்தது. அதாவது தனிநபர் இல்லங்கள் பற்றிய கவனத்தை விட சமூகம் முழுமைக்குமாகக் கவனம் செலுத்துவது, வறுமைக் கோட்டுக்கு மேலுள்ள சில வீடுகளையும் இத்திட்டத்தில் சேர்ப்பது.

ஆனால் இன்னமும், இந்தியாவில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 40 பேர் தினமும் பேதியால் இறந்து போகிறார்கள். டயாரியா போன்று சுகாதார சீர்கேட்டால் வரக்கூடிய பிரச்னைகளால், உணவில் உள்ள ஊட்டச்சத்தை குழந்தைகளால் உட்கிரகிக்க முடிவதில்லை. குழந்தைகள் குறை வளர்ச்சிக்கும், திறந்தவெளி மலம் கழித்தலுக்கும் தொடர்பிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.



கழிப்பறை இன்மையால் உடல்நலம் மட்டும் பாதிக்கப்படவில்லை. தேசத்தின் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. உலக வங்கி கணக்குப்படி, இந்தியாவின் GDP-யில், 6.4 சதவிகித இழப்பை இது ஏற்படுத்துகிறது. அதாவது ஒவ்வொரு இந்தியர்களின் இழப்பு கிட்டத்தட்ட 2,400 ரூபாய்.

**சுத்தமான, ஆரோக்கியமான இந்தியாவை கட்டமைப்பதில் கழிப்பறையின் பங்கு இவ்வளவு இருக்கும் பொழுது, ஏன் கழிப்பறை கட்டுவதிலும், தொடர்ந்து பயன்படுத்துவதிலும் இவ்வளவு சிக்கல்கள் எழுகின்றன?**

**கடந்த முப்பது ஆண்டுகளாக (1986 - 2016) திறந்த வெளியில் மலம் கழிப்பதைத் தடுக்க, தவிர்க்க மேற்கொண்ட முயற்சிகள், ஏன் நினைத்த பலனைத் தரவில்லை? ஏன் கடந்த 20 ஆண்டுகளில் கட்டப்பட்ட கழிப்பறைகளில் 1 கோடி கழிப்பறைகள் பயன்படுத்தாதவை ஆகிவிட்டன?**

**திட்ட வடிவமைப்பிலும், அமலாக்கங்களிலும் இருக்கும் சிக்கல்கள் என்ன?**

பெங்களூருவைச் சேர்ந்த பொது விவகார மையம் (Public Affairs Center) என்ற அமைப்பு தூய்மை பாரத இயக்கத்தின் திட்ட அமலாக்கம் குறித்து ஒடிசாவில் 6 மாவட்டங்களிலும், தமிழக மாவட்டங்களிலும், ஆய்வு நடத்தியது.

இந்த மூன்று வருட ஆய்வின் நோக்கம்

● கழிப்பறைகள் தொடர்பான மக்களின் தேவை மற்றும் விநியோகத்தில் வரக்கூடிய பிரச்னைகளைக் கண்டறிவது ஆகும். மக்களின் குரலை வெளிக்கொணர்ந்து, ஒலிக்கச் செய்து அதன் மூலம் சேவை புரிவோர்களின் பொறுப்பேற்பை அதிகரிப்பதின் மூலம் திட்ட அமலாக்கத்தை மேம்படுத்த வழிவகை செய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

● இதற்காக பொது விவகார மையம், ஐந்து விதமாவ சமூகப் பொறுப்பேற்றல் ஆய்வுக் கருவிகளை வடிவமைத்து கிராமப்புறங்களில் ஆய்வு செய்தல். அதில் வழங்கப்பட்ட நிதியில் செலவிடப்பட்டது பற்றிய ஆய்தல்.



● அரசு மற்றும் மக்கள்தரப்பில் எதிர்வினைகளைக் கேட்டல்.

● தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் ஆழ்ந்த புரிதலுக்காக தனிநபர்களிடம் நேர்காணல் செய்தல், அமைப்புக்குள் நிதி பட்டுவாடா மற்றும் நடைமுறை பொறுப்புகளில் வரக்கூடிய முரண்பாடுகள் பற்றி ஆய்வு செய்தல்.

● சமூக மதிப்பீட்டு அட்டை- மக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் நேருக்கு நேர் திட்ட அமலாக்கத்தில் உள்ள நிறை, குறைகள் பற்றிக் கூடிப் பேசுதல் இவையெல்லாம் ஆய்வு செய்தது.

**ஆய்வில் தெரிய வந்த தகவல்கள்:**

★மற்றவர்களின் வற்புறுத்தல்களின்றி தாமாகவே கழிப்பறை தேவையை உணர்ந்து கட்டுபவர்களே தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள்.




அரசு போடும் திட்டங்களைப் புரிந்து சிறந்த குடிமகனாக தம்மை நிறுவி அதைச் செயல்படுத்த துணை நிற்பதில்தான் இந்தத் தேசம் முழுமையடையும். வளமாகும் வல்லரசு ஆகும்.

★போதுமான தண்ணீர் வசதி இல்லாததும், கழிப்பறையின் பயன்பாட்டைப் பாதிக்கிறது.

★பல இடங்களில் கழிப்பறைகள் ஒப்பந்தக்காரர்களால் கட்டப்படும் பொழுது வடிவமைப்பு, தேர்வு, கட்டுமானம் ஆகியவை குறித்து பயனாளிகள் தலையிட முடிவதில்லை.

தற்பொழுது கிராம அளவில், மக்கள், கிராம அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, திட்ட அமலாக்கம் மேம்படுத்தப் பட்டு வருகிறது.

அரசு போடும் திட்டங்களைப் புரிந்து சிறந்த குடிமகனாக தம்மை நிறுவி அதைச் செயல்படுத்த துணை நிற்பதில்தான் இந்தத் தேசம் முழுமையடையும், வளமாகும் வல்லரசு ஆகும். இதுவும் வல்லரசுக்கான முயற்சிதான். என்ன சரிதானே? ●